<u>மன்னார்குடி நகராட்சி</u>

# சாதாரணக்கூட்டம்

நிகழும் சார்வரி வருடம் ஆவணி மாதம் – 15ம் தேதி (2020 ம் வருடம் – ஆகஸ்டு 31ந் தேதி) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

<u>பொருள்கள்</u>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் ஜீலை – 2020 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண் .1147 பதிவு செய்யப்பட்டது, |
| பொருள் எண்.2 | இந்நகராட்சியில் பணிப்புரியும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் கோயம்புத்துார் தமிழ்நாடுநகரியல் பயிற்சி நிலையத்திற்கு 2020–2021 –ம் ஆண்டிற்கு ரூ 90,000/–பங்கு தொகை செலுத்திட கோரி வரப்பெற்ற தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையம், கோயம்புத்துார் அவர்களின் ந.க.எண். 276/2020/அ2 நாள்.18.08.2020ன் படி வருடாந்திர பங்கு தொகை ரூ 90,000/– ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– 1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. தனி அலுவலா் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1148 அனுமதிக்கப்பட்டது.. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.3 | மன்னார்குடி நகராட்சி அலுவலகத்தில் 2020–2021 ஆம் ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் பொருட்கள் ஆணையர் மற்றும் பொறியாளர் பிரிவு மற்றும் இதர பிரிவுகளுக்கு பேனா பென்சில் போன்ற இதரபொருட்கள் வாங்கிய வழஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ 5000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1149 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.4 | மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலராஜவீதியில் தலைமை தபால் நிலையம் அருகில் ஆவின்பாலகம் அமைக்க 10 X 10 அளவிலான இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேலராஜவீதியில் 10 X 10 அளவில் ஆவின் பாலகம் அமைத்துக் கொள்ளவும், அதற்குண்டான வாடகை கட்டணத்தை நிர்ணயித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– 1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. வாடகை கட்டணத்தை நிர்ணயம் செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம். | தீர்மான எண்.1150 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.5 | மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பராஙகுசம் தேசிகர் தெருவில் அமைந்துள்ள குளம் எனது அனுபவத்தில் இருந்துவருகிறது அதனை தூர்க்கவோ அல்லது கட்டிடம் கட்டவோ, தூர்வாரவோ கூடாது என விளம்புகை மற்றும் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி திரு. ராஜா, EX MC என்பவரால், மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் O.S.No. 61 /2014 என ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணையில் வருகிறது அதனை நகராட்சி சார்பில் வாதிட நகராட்சி வழக்கறிஞர் திரு எஸ்.உதயகுமார் Bsc.BL., அவர்கள் வாதிடவும் அதற்குண்டான செலவினம் ரூ 25,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.1151 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம் | |
| பொருள் எண்.6 | இந்நகராட்சிக்குட்பட்ட ஒத்தை தெரு , திருப்பாற்கடல் தெரு (மன்னை நகர் அருகில்) , ருக்மணிகுளம் மேல்கரை மற்றும் வ.உ.சி சாலை ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் (Water ATM) அம்மா குடிநீர் வழங்கும் திட்டத்தன் கீழ் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது. மேற்படி, குடிநீர் வழங்கும் இயந்திரத்தில் அவப்போது பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 4 இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் ஒரு வருடத்திற்கு பரமாரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1152 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.7 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 50 U 2866 கழிவுநீர் வாகனத்தில் கம்பரசர் பிளேடு தேய்ந்து உள்ளதால் புதிதாக கம்பரசர் பிளேடு வாங்கி பொருத்தி இயக்குவதற்கு ஏதுவாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.53,000/– க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.3083/2020/எச்1) | தீர்மான எண்.1153 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.8 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு பராமரிக்கப்பட்டு வரும் BOV வாகனம் 11 எண்ணிக்கை வண்டிகளின் பேட்டரிகள் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலை ஏற்படுவதால் பொது சுகாதாரப் பணிகள் தேக்க நிலை ஏற்படுவதாக துப்புரவ ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே பொது சுகாதாரப் பிரிவின் அவசரம் அவசியம் கருதி மேற்படி வாகனஙகளுக்கு புதிதாக பேட்டரிகள் வாஙகி பொருத்தி இயக்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 11,00,000/— க்குள் மேற்கொள்ளவும், இதற்கான ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொண்டு கொள்முதல் செய்திட மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>(ந.க.எண். 2630/2020/எச்1) | தீர்மான எண்.1154 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |
| பொருள் எண்.9 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக, தற்போது கொரோனா பாதிப்பும் / இறப்பும் அதிகரித்து வருவதால் அதற்கு தேவையான (PPE) முழுகவசம் மற்றும் கையுறை போதிய இருப்பு இல்லாததால், துப்புரவ ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.<br><br>எனவே பொது சுகாதாரப் பிரிவின் அவசரம் அவசியம் கருதி மேற்படி (PPE) முழுகவசம் மற்றும் கையுறை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/— க்குள் மேற்கொள்ளவும், இதற்கான ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொண்டு கொள்முதல் செய்திட மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>(ந.க.எண். 2906/2020/எச்1) | தீர்மான எண்.1155 அனுமதிக்கப்பட்டது. |

பொருள் எண்.10

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் BOV வாகனங்களுக்கு புததாக லித்தியம் பேட்டரி மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/–க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக அவசரம் அவசியம் கருதி மேற்படி பணிக்கு 26.08.2020 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Star Engineering 24 New Beemar Road Thiruppur. | 57,000/– (ஒரு பேட்டரி) |
| 2. | UNASE E Rickshaw 91/180, Kovilpalaiyam Karailudi. | 58,000/– (ஒரு பேட்டரி) |

அலுவலகக்குறிப்பு :–

1. மேலே வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்ட Star Engineering,Thiruppur நிறுவனத்தின் மிக குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழஙகியதைனையும் மன்றம்அங்கீகரிக்கலாம் .

(ந.க.எண்.2680/2020/)

தீர்மான எண்.1156
அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பொருள் எண்.11 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 31 ல் ஞானம் நகரில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி, நகரின் சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 7.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1157 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.12 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 31ல் வசந்தம் நகரில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி, நகரின் சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 7.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1158 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.13 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 31ல் திருமூலர் நகரில் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி நகரின் சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 7.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1159 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.14 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20ல் தேவர் காலணியில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி, சாலைகளை செப்பனிட்டு புதிதாக தார் சாலை அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 3.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1160 ஒப்புதல் அளிக்கப்பட்டது. |
| பொருள் எண்.15 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24ல் ராமநாதன் தெருவில் உள்ள சாலைகளில் கனரக வாகனங்கள் அதிகமாக செல்வதால் சாலைகள் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்து இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும், பள்ளி குழந்தைகளும் , வயது முதியவர்களும் அவ்வழியே செல்வதால் அவர்களின் பாதுகாப்பு கருதி ராமநாதன் தெரு முதல் P.R.M பூஙகா வரை தடுப்பு இரும்பினால் ஆன தடுப்பு (Barrigade) அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1161 அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்.16 | 16 .இந்நகராட்சியில் உள்ள ஆணையர் குடியிருப்பு கட்டிடம் நீண்ட நாட்களாக ஆணையர் பணியிடம் காலியாக இருந்ததால் பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்து ஆணையர் குடியிருக்க இயலாத நிலையில் உள்ளது. புதிதாக ஆணையர் பதவி ஏற்று உள்ளதால், மேற்படி குடியிருப்பில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து. பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் மேலும், பொறியாளர் குடியிருப்பில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து அதன் அருகாமையில் உள்ள சுற்று சுவர் கடந்த மழையின் காரணமாக இடிந்து உள்ளது. மேற்படி ஆணையர் மற்றும் பொறியாளர் குடியிருப்பினை பழுது நீக்கம் செய்து புதுப்பித்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 8.10 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :– மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.1162 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.17 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகர் பகுதிகளில் உள்ள தெருக்களில் வீடுவீடாக குப்பைகள் சேகரித்தல் மற்றும் இனம் பிரித்தல், சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடஙகிற்கு எடுத்து செல்லுதல் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை பராமரித்தல் மற்றும் அனைத்துவிதமான பணிகள் செய்திட தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (114 நபர்கள் ஓட்டுநர்கள் உட்பட) வழஙகிட ஸ்ரீமாதா சோஷியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன், மன்னார்குடி நிறுவனத்திற்கு ஒப்பந்தப்பணி பார்க்க அனுமதிக்கப்பட்டு இவ்வலுவலகத்தினால் 01.08.2020 முதல் பணி உத்திரவு வழஙகப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>இந்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கு ஓட்டுநர்கள் பணிபார்த்திட ஆட்கள் விநியோகம் செய்யும் ஒப்பந்தக்காலம் 31.08.2020 உடன் ஒப்பந்த உரிமம் முடிவடைவதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதன் தொடர்பான ஒப்பந்தப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் போதிய கால அவகாசம் இல்லாததாலும் பொது சுகாதார பணி மற்றும் பொது மக்கள் சேவையின் அவசரம் அவசியம் கருதி மேலும் 01.09.2020 முதல் 30.11.2020 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து மேற்படி நிறுவனத்திற்கு உரிமம் வழஙகிடவும், அதற்காகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு :- 1. பொது சுகாதார பணி மற்றும் பொது மக்கள் சேவை அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் 01.09.2020 முதல் 30.11.2020 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தப்பணி மேற்கொள்ள தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று உரிமம் நீட்டிப்பு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 01.09.2020 முதல் 30.11.2020 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தப்பணி மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண். 258/2015/எச்1) | தீர்மான எண்.1163 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்) திருமதி ஆர் கமலா
தனி அலுவலர்
மன்னார்குடி நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ)
மன்னார்குடி நகராட்சி